# மார்ச் – 20 – புதன்

**உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும்.**
**மத் 20:27**

## முதல் வாசகம் : எரேமியா 18 : 16 – 20

யூத நாட்டினரும், எருசலேம் வாழ் மக்களும், "வாருங்கள், எரேமியாவுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்வோம். குருக்களிடமிருந்து சட்டமும், ஞானிகளிடமிருந்து அறிவுரையும், இறைவாக்கினரிடமிருந்து இறைவாக்கும் எடுபடாது. எனவே அவர்மீது குற்றம் சாட்டுவோம். அவர் சொல்வதைக் கேட்கவேண்டாம்" என்றனர். ஆண்டவரே, என்னைக் கவனியும் என் எதிரிகள் சொல்வதைக் கேளும். நன்மைக்குக் கைம்மாறு தீமையா? என் உயிரைப் போக்கக் குழிபறித்திருக்கின்றார்கள் அவர்கள்மேல் உமக்கிருந்த சினத்தைப் போக்குவதற்காக அவர்களைக் குறித்து நல்லதை எடுத்துச் சொல்வதற்கு நான் உம்முன் வந்து நின்றதை நினைவுகூரும்.

**பதில்பாடல்:** ஆண்டவரே உமது பேரன்பால் என்னை விடுவித்தருளும்.

## நற்செய்தி : மத்தேயு 20 : 17 - 28

அக்காலத்தில், இயேசு எருசலேமை நோக்கிச் செல்லும் வழியில் பன்னிரு சீடரையும் தனியே அழைத்து, "இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிடமகன் தலைமைக் குருக்களிடமும், மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவருக்கு மரணதண்டனை விதிப்பார்கள். அவர்கள் அவரை ஏளனம்செய்து, சாட்டையால் அடித்து, சிலுவையில் அறையும்படி பிற இனத்தவரிடம் ஒப்புவிப்பார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்" என்று அவர்களிடம் கூறினார். பின்பு செபதேயுவின் மனைவி தம்மக்களோடு ஒரு வேண்டுகோள் விடுக்குமாறு இயேசுவிடம் வந்து பணிந்து நின்றார். "உமக்கு என்னவேண்டும்?" என்று இயேசு அவரிடம் கேட்டார். அவர், "நீர் ஆட்சி புரியும்போது என்மக்களாகிய இவர்கள் இருவருள் ஒருவன் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் இடப்புறமும் அமரச்செய்யும்" என்றுவேண்டினார். அதற்கு இயேசு, "நீங்கள் என்னகேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கப்போகும் துன்பக்கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?" என்றுகேட்டார். அவர்கள் "எங்களால் இயலும்" என்றார்கள். அவர் அவர்களை நோக்கி, "ஆம், என் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள். ஆனால் என் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமரும்படி அருளுவதோ எனது செயல் அல்ல.முறாக அவ்விடங்களை என் தந்தை யாருக்கு ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவர்களுக்கே அவை அருளப்படும்" என்றார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த பத்துப்பேரும் அச்சகோதரர் இருவர் மீதும் கோபங் கொண்டனர். இயேசு அவர்களை வரவழைத்து, "பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடி மக்கள் அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள் இதை நீங்கள் அறிவீர்கள். உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. உங்களுள் பெரியவராக இருக்கு விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" என்று கூறினார்.

**தியானம்:** தலைமைத்துவம் என்பது கானகத்திற்கும், அன்பியம் என்பது நாட்டிற்கும் உரியவை. ஆனால், இன்று கானகத்தின் பல இயல்புகள் நாடுகளுக்குள்ளே புகுந்தமையால், நாடுகள் பல கானகத்தைவிட அமைதியற்ற சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதை நாம் அன்றாடச் செய்திகள் வழியாக அறிகின்றோம். இந் நிலைமைகளுக்கு அந்தந்த நாடுகளின் தலைவர்களே காரணம் என்றால் அது மிகையாகாது. இயேசு குறிப்பிட்டபடியே, "பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடி மக்கள் அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள்." இங்கு பிற இனத்தவர் என இயேசு சுட்டிக்காட்டியது, அன்று உண்மைக் கடவுளை அறிந்திராத மக்களை. ஆனால், இயேசு "உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. உங்களுள் பெரியவராக இருக்கு விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும்." என்று கூறுவதோ கிறிஸ்துவை அறிந்திருக்கிறோம் என்றும், கிறிஸ்தவர்கள் என்று நம்மை நாமே அழைத்துக்கொள்ளும் நம்மையே. இறைமகன் இயேசு கற்றுத் தந்த 'தலைதைத்துவப் பண்பாடுகள்' நாடுகளுக்கு மட்டுமல்ல, சமூகங்களுக்கும், ஏன் வீடுகளுக்கும் பொருத்தமானவையே. இன்று நம் கிறிஸ்தவ சமூகங்களிடையே இவ்விடயத்தில் முரண்பாடுகளையே நாம் காணமுடிகின்றது. அதிகார போதையிலே சமூகத்தையே சிதறடித்துக் கொண்டிருக்கும் தலைவர்கள் இன்றும் நம்மிடையே இல்லையா? பிள்ளைகளுக்கு முதலிடம்வேண்டி முண்டிபோடும் பெற்றோர்கள் நம் சமூகத்திலே இல்லையா? சிந்திப்போம்! அன்பியப் பண்பில் நம் வீட்டையும், சமூகத்தையும், நாட்டையும் கட்டியெழுப்புவோம்.